
# மன்னா

## CSI தமிழ் திருச்சபை அலைன்




பொழிவு 13 ஜீன் 2020 ஆகாரம் 06

.என் காதினால் உம்மைக்குறித்தக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது

யோபு - 42:5

# CSI -TAMIL PARISH - ALAIN ,UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

# OBITUARY



## Dr. G.ALEXIS JOY , M.B.B.S., M.D

3’Dec-1943 – 14’May-2020

**Co-Founder**

**CSI Tamil Parish, Al Ain , UAE**

**Heartfelt condolences to the bereaved
Our prayers and thoughts are with
the family during this difficult
time May the comfort of
God help them during this time of need.**

# ஆயர் மடல்...



அன்புக்குரியவர்களே!

மண்ணுலகை பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு விண்ணுலமாக மாற்றிக்கொண்டிருப்பவர்களே! தேவராஜ்ஜியத்தின் அதிபதிகளே, பிரபுக்களே, செல்லப்பிள்ளைகளே, சோர்ந்து போகாதிருங்கள், உங்கள் துக்கம் விரைவில் மிகவும் சந்தோஷமாக மாறும். கர்த்தர் விரைவில் மாற்றங்களை கொண்டு வருவார் என்ற நம்பிக்கையை பெலப்படுத்திக் கொள்ளுங்கள். கொடிய கொரோனா; என்னைனுடைய பயணங்களையும், அருட்திரு.எஸ்.பி.பாஸ்கர் அவர்களின் வருகையையும் சிறிது தடைபண்ணி யிருக்கிறது. என்னுடைய வேண்டுக்கோளுக்கிணங்க; நமது சபைக்குழு எங்களுடைய விமான பயண ஏற்பாடுகளை தீவிரமாக முயற்சி செய்து வருகிறார்கள். **My heartfelt appreciation to him and other members those who taking efforts.**

கர்த்தராகிய இயேசுவின் துணைகொண்டு அழுகையின் பள்ளத்தாக்கை நீரூற்றாக மாற்ற தேவனால் பிறந்த தேவராஜ்ஜியத்தின் புத்திர, புத்திரிகளாகிய நாம் ஓய்வு நாள் ஆசரிப்பு தடையையும் மாற்றி virtual worship service'ஐ ஒவ்வொரு வெள்ளி மாலையிலும் சரியாக 7'மணிக்கு ஒளிபரப்புச்செய்து நாம் சாதனைபடைத்துக் கொண்டிருந்தாலும், பலர் சரியாக 7'மணிக்கு ஆராதனையில் ஒரேநேரத்தில் பங்கெடுக்காமல், வெவ்வேறு நேரங்களில் ஏனோதானோ என்று பங்கெடுப்பது **virtual worship service'ன்** நோக்கத்தையே சிதைப்பதாக, திருச்சபையின் ஒழுங்கை சிதைப்பதாக அமைந்துவிடும் என்பதை மிகுந்த வருத்தத்தோடு பதிவு செய்கிறேன். இதன் மூலமாக நாம் ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்கவில்லை என்ற பாவத்திற்குள்ளாகிறோம். மேலும் பிள்ளைகளையும் சரியான சமயத்தில் ஆராதிக்க முடியாமல் தடை செய்கிறோம். பார்ப்பது வேறு, பங்கெடுப்பது வேறு.

**You are not viewers of worship service, but you are called and separated to participate in worship on particular time** என்பதை கவனத்தில் கொண்டு **be a real virtual worshipper'**ஆக மாறுங்கள். ஆதலால் உங்களுடைய சுதந்திரத்தை எப்பொழுதுமே திருச்சபை மதித்துப்போற்றுகிறது. ஆலயகதவுகள் திறந்தாலும், இன்றைய சூழலில் நாம் அநேக காரியங்களை கற்றுக்கொண்டுருக்கிறோம் **virtual choir, virtual fellowship, virtual children bible school, virtual women and men and youth fellowships, virtual bible study.**

நம்மை விட்டு நித்திய வாழ்விற்கு கடந்து சென்றிருக்கிற **Late. Dr. Gabriel Alexis Joy** அவர்களின் குடும்பத்தை கர்த்தர் தாங்கி, ஆறுதல் படுத்துவாராக...!

**REV. M. CHRISTOPHER RAJENDRAN**

# திருமறை தியானம்

## அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்



‘’As they pass through the Valley of Baca, they make it a place of springs’’ Psalms 84: 6

அன்புக்குரியவர்களே..!

இன்றைய கொள்ளை நோயின் பாதிப்பினால் நம்முடைய வாழ்க்கை கண்ணீர் நிறைந்த பள்ளத்தாக்கில் பயணம் செய்துகொண்டிருக்கிறது. **We are travelling in the midst of the Valley of tears. Baca means tears.** இப்படிப்பட்ட கண்ணீர் நிறைந்த சூழலில் விசுவாசிகளாகிய நமக்கு ஒரே அடைக்கலம் தேவனுடைய வாசஸ்தலமான திருச்சபையின் ஐக்கியம்,ஓய்வுநாள் ஆராதனை, தனிப்பட்ட தியானம், குடும்ப ஜெபம், ஜெபக்கூட்ட ஐக்கியம், மற்றும் அனைத்து திருச்சபை ஐக்கியங்களான **(Men's fellowship, women's fellowship, and youth fellowships).** இவைகளின் ஒரே நோக்கம் தேவபிரசன்னத்தை நம் வாழ்க்கையில் நிஜமான ஒரு அனுபவமாக்கி, நம் கண்ணீரைத்துடைத்து, கண்ணீர் நிறைந்த பள்ளத்தாக்கை தைரியமாக ஊடுருவிக்கடக்க உதவி செய்வதோடு, துக்கங்களை சந்தோஷமாக மாற்றும் வண்ணம் கண்ணீர் வரவழைக்கும் வேதனையான காரியங்களை மனதார ஏற்றுக்கொள்ளும் ஆவிக்குறிய சிந்தையையும், சரியான புரிதலையும் நமக்குக்கொடுப்பதோடு, இயற்கைக்கு மேற்ப்பட்ட அதிசயத்தையும் இயேசு நம் வாழ்க்கையிலே நிகழ்த்தி, நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்துகிறார்.

**Yes, indeed Lord Jesus Christ would transform our Valley of weeping into Valley of Well. In our middle eastern context Valley of Well means Abundant Blessings of Petrol. (that means Valley of Wealth and Prosperity).** உலக மக்கள் தங்களது சொந்த பெலத்தில் அழுகையின் பள்ளத்தாக்கை கடக்க முடியாமல் தப்பித்துக்கொள்ள மாற்று வழிகளை மாம்சீக சிந்தைப்படி யோசித்துக்கொண்டி ருக்கிறார்கள். பலர் அழுகையின் பள்ளத்தாக்கில், அழுது, அழுது தங்களையே அழித்துக்கொள்கிறார்கள். அநேகர் பெலவீனப்பட்ட நிலையில்,உதவியற்ற நிலையில், தேவனுடைய உதவியையும் நாடித்தேடத் தெரியாம லிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான, சவால் நிறைந்த சூழலில் விசுவாசிகளாகிய நமக்கோ ஆவிக்குரிய முதிர்ச்சியையும், பக்குவத்தையும்,வளர்ச்சியும், தேவனுடைய கரங்களில் நம்மை முற்றிலுமாக அர்ப்பணித்து, தேவபெலத்தை தரித்துக்கொள்ளுகிற நேரமாகயிருப்பதுதான் இப்படிப்பட்ட அழுகையின் பள்ளத்தாக்கு. பிறருக்கு அது கண்ணீர் ஆனால் தேவனையே சார்ந்திருக்கிற நமக்கோ அது தண்ணீர் அல்லது பெட்ரோல் கிணரைப்போன்ற செழிப்பும், ஆசீர்வாதமும் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

**Many people pass through the Valley of tears and come out empty, without any Blessings. But Spiritual minded people pass through the Valley of tears and with of help of Jesus' abiding presence in the Person of Holy Spirit would come out not only with abundant Blessings but also Spiritual growth and maturity. So, the Valley of Corona pandemic make us better persons. Prosperity and Blessings will follow us. So, don't worry about the Pandemic situation! Let us walk through by faith in the Lord Jesus Christ along with the fellowship of our local church community. God be with you all!**

**Rev. M. Christopher Rajendran / Presbyter**

# செயலரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே...

மீண்டும் ஒரு புதிய மாதத்தின் மகிழ்ச்சியான எதிர்பார்ப்புடன் உங்களை சந்திக்கும் தருணத்தை தந்த ஆண்டவருக்கு எனது நன்றிகள் பல.. திருச்சபையின் குடும்பத்தார் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 14/5/2020 அன்று நம்மை விட்டு பிரிந்து சென்ற **டாக்டர். அலெக்சிஸ் ஜாய்** அவர்களை நினைவு கூறுகிறேன்; அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சபைக்கும், ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சீரிய முறையில் இறை பணியாற்றி தனது சொந்த பேராயத்திற்கு திரும்பி செல்ல இருக்கும் நமது போதகர் **அருள்திரு. எம். கிறிஸ்டோபர் ராஜேந்திரன்** அவர்களை நன்நட்புடன் நினைவு கூறுகிறேன்.. சபையின் வளர்ச்சிக்காக கடந்த மூன்று வருடங்களாக உழைத்து; தேவ ஊழியத்தை சிறப்பாக நிறைவேற்றிய அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். 31/5/2020 அன்று நடந்த போதகரின் பிரிவு உபசார விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கின போதரர்களுக்கும், சபை மக்களாகிய உங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நமது போதகரின் பிரயாண அனுகூலங்களை கர்த்தர் வாய்க்க செய்ய வேண்டுமென்று சொல்லி நாம் ஜெபிப்போம்.

நமது திருச்சபைக்ககென்று புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிற போதகர் **அருள்திரு எஸ்.பி.பாஸ்கர்** அவர்களை சபைக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தற்போதுள்ள கால சூழ்நிலைகள் யாவும் மாறுவதற்கும், குறித்த நேரத்தில் விசா கிடைக்கபெற்று, அலையென் பட்டணத்திற்கு கடந்து வந்து இறை பணியை நம்முடைய திருச்சபையில் சிறக்க செய்யவும் நீங்கள் யாவரும் ஜெபிக்க வேண்டிக்கொள்கிறேன்.

ஆலயக் கதவுகள் திறக்கப்படவும், நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் விடுதலைபெறவும் நாம் யாவரும் கண்ணீரோடும் ஊக்கத்தோடு திறப்பிலே நிற்போம். தவறாமல் ஆன்லைன் மூலமாக ஒளிபரப்பப்படும் ஆராதனைகளில் பங்கு பெறுங்கள் கர்த்தரோடு தொடர்ந்து நிலைத்திருங்கள். எல்லோரும் எப்போதும் துணைபுரியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உறுதியுடன் நம்புவோம். துன்பங்களிலும் போராட்டங்களிலும் துணைபுரிய அவரே போதுமானவர் இயேசுகிறிஸ்து உங்கள் அனைவருக்கும் நிறைவான மகிழ்ச்சியையும் அமைதியையும் ஆசியையும் அருள்வாராக..

இப்படிக்கு ...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
எஸ். சுரேஷ் ராஜன்

## வேதாகம துணுக்கு



# வெஸ்லியின் மெதடிஸ்ட் மிஷனெரி சங்கம்

### தலைமை ஏற்கத் தயங்கிய தலைவர்

ஜேம்ஸ் லிஞ்ச் தம் பதினோராம் வயதிலேயே மெதடிஸ்ட் சபையில் சேர்ந்தார். வளர்ந்து பெரியவரானபோது ‘‘வேத வகுப்பு’’ கட்குச் (Class) செல்வார். ஜெபக்கூட்டங்கள் நடத்திடவும் உதவி செய்வார். பின்னர் அருட்பொழிவு பெறாத அருளுரையாளர் ஆனார். இப்பணிக்குக் கடவுள் தம்மை அழைத்திருக்கிறார் என்று இவர் எண்ணவில்லை. ஆனால் மற்றவர்களோ அவ்வாறு நம்பினர். மற்றவர்களின் கருத்தை மதித்து ஏற்றுக்கொண்டு தொடர்ந்து அருளுரையாளராகப் பணியாற்றி வந்தார். வாழ்நாளின் முடிவுபரியந்தம் இதுவே இவரின் குணநலமாக அமைந்துவிட்டது.

தன்னம்பிக்கை குறைந்தவர். தம் திறமையில் நம்பிக்கையில்லாதவர். எனவே பிறரை அதிகம் சார்ந்திருந்தார். ‘‘தலைமை ஏற்கத் தயங்கிய தலைவர்’’ என்று இவரை அழைப்பது மிகவும் பொருத்தமல்லவா?

### மிஷனெரியாகச்செல்ல அழைப்பு

ஜேம்ஸ் லிஞ்ச் மெதடிஸ்ட் திருச்சபையில் ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். வட அயர்லாந்தில் சில குருசேகரங்களில் பணியாற்றினார். அவர் தமது நாற்பதாவது வயதில். அறிவர் கோக்கை முதன் முதல் சந்தித்தார். அப்பொழுது இந்தியாவுக்கு மிஷனெரியாகச் செல்லுமாறு அழைக்கப்பட்டார். ஆனால் லிஞ்ச் தாம் இவ்வித கண்ணியமான பணிக்குத் தகுதியில்லாதவரென எண்ணினார். இயேசுவைக் குறித்து அறியாத மக்களின் மனமாற்றத்திற்காகத்

தொடர்ந்து வேண்டுதல் செய்து வந்தவர் இவர். எனவே இயேசுவைக் குறித்து அறியாத மக்களுக்கு அவரைப்பற்றிச் சொல்லக் கிடைத்த வாய்ப்பாகக் கருதி, இப்பணியையேற்காமல் போனால் இறைவேண்டுதலால் யாது பயன் என்று சிந்திக்கலானார். இச் சிந்தனையின் விளைவாக இந்தியா செல்லச் சம்மதித்து லண்டன் சென்றார். அருட்பணிக்குச் செல்ல, ஆறு பேர்களுக்கு மேல் விண்ணப்பித்திருந்தனர். எனவே மற்றவர்கட்கு விட்டுக்கொடுக்கும் விதத்தில் தமது விண்ணப்பத்தைக் திரும்பப் பெற்றுக்கொள்ள முன் வந்தார். ஆனால் அவர் விருப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### இலங்கைப் பயணம்

1813-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏழு மிஷனெரிமார் இலங்கை நோக்கிப் பயணமாயினர். பயணிகள் கப்பல்கள், சரக்குக் கப்பல்கள் என முப்பது கப்பல்கள் சென்றன.

இவர்களுக்கு இரண்டு கப்பல்களில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இவர்களிடையே அன்பையும் ஐக்கியத்தையும் ஐந்து மாதப் பயணம் வளர்த்தது. தங்கள் பணி குறித்து ஆழ்ந்து சிந்தித்துத் திட்டமிடவும் பயணக் காலம் உதவியாக இருந்தது. அனுதினமும் ஒன்றாகக் கூடி ஜெபித்தும், திருமறை ஆய்வு செய்தும், பாடியும் மகிழ்ச்சியாய்ப் பயணம் செய்தனர். அநேக சமயங்களில் உடன் பயணம் செய்த போர்வீரர்களும், அவர்களுடைய மனைவிமாரும், வேறு சில வேளைகளில் கப்பலில் பணியாற்றிய அதிகாரிகளும் கலந்துகொள்ளுவர்.

தொல்லைகளும், துன்பங்களும் நிறைந்த பயணமாகவும் இது அமைந்தது. புறப்பட்ட நான்கு நாட்களுக்குள் கப்பல்கள் கடும் புயலில் சிக்கின. ஏழு கப்பல்கள் மூழ்கிப்போயின. பலர் கடற்பிணியால் வருந்தினர். ஒரு மிஷனெரியின் துணைவியார் இறந்து போனார். ஒரு சமயம் லிஞ்சும் நோயுற்றார். இவரது கைகள் பாதிக்கப்பட்டன. எனவே கப்பலில் தம் அறைக்குள்ளாகவே இவர் தங்கியிருக்க நேரிட்டது. அதிகமான மனச்சோர்வு ஏற்பட்டது. அயர்லாந்திலேயே தங்கிப் பணியாற்றி இருந்தால் நலமாக இருந்திருக்கமோ என்றும் சிந்தித்தார். அவர் தம்மைக் குறித்து எப்போதும் தாழ்வாக எண்ணியவர். மிஷனெரியாகப் பணியாற்றத் தகுதியற்றவன்; சோம்பேறி; பிற மொழிகளைக் கற்கும் ஆற்றமில்லாதவன்; ஆழ்ந்த இறைபற்றில்லாதவன் என்று இவ்வாறெல்லாம் தம்மைக் குறித்து நினைத்தவர்.

யாருமற்ற அனாதைகள் போலாயினர். பம்பாய் வந்தடைந்தனர். அன்புத் தலைவரும் உடனில்லை; ஒருவேளை உணவிற்கும் வழியில்லை;

கையிலும் காசில்லை. இங்கிலாந்திலிருந்து பணம் வந்து சேரவும் ஓராண்டு ஆகுமே என்று கலங்கினர்.

கைவிடாத கடவுள் ஒருவர் உண்டல்லாவா? பிறகு ஏன் கலக்கம்? கப்பல் தலைவர் ஒருவர் இவர்களைப் பம்பாயிலிருந்த ஒரு வணிகருக்கு அறிமுகப்படுத்தினார். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநரிடம், அவ்வணிகர் இவர்களை அழைத்துச்சென்றார். ஆளுநர் சிறுவனாக இருந்தபோதே, ஜான் வெஸ்லியை அறிந்தவர்.

எனவே அவருடைய குழுவினருக்கு மனமகிழ்ச்சியுடன் உதவிட முன்வந்தார். ஆளுநரின் குடியிருப்பொன்று நகரத்திற்கப்பாலிருந்தது. ஒரு மாத காலம் அங்குத் தங்கியிருக்க மிஷனெரிமாரை அனுமதித்தார். இதற்கிடையே அவர்கள் இலங்கை செல்வதற்கும், பயண ஒழுங்குகள் செய்து கொடுத்தார். மிஷனெரிமார் ஜேம்ஸ் லிஞ்சைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். லண்டன் அலுவலகமும் இந்தியமனத்தை அங்கீகரித்தது.

1814-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29-ஆம் நாளில் இலங்கையில் தென்மேற்குப் பகுதியிலுள்ள கல்லே என்னுமிடத்தை அவர்கள் சேர்ந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனி ஆளுநரின் ஆயர், மிஷனெரிமாரை அன்புடன் வரவேற்றார். அப்பகுதியில் அநேக பள்ளிகள் செயல்பட்டு வந்தன. அவற்றில் ஆசிரியர்களாகப் பணியாற்றுமாறு அவர்களுக்கு ஆலோசனை அளிக்கப்பட்டது. ஏனெனில் ஆசிரியப் பணியில் ஈடுபட்டால் அவர்களுக்கு அரசாங்கமே ஊதியம் அளித்துவிடும். இங்கிலாந்திலிருந்து பணவுதவி வந்தடையும் வரை மிஷனெரிமார் அல்லல்பட வேண்டியதில்லை. எனினும் கடவுளின் திருச்சித்தம் என்னவென்றறிய வேண்டாமா? பத்து நாட்களாகக் கடவுளின் வழிநடத்துதலுக்காக ஜெபித்தனர். இறுதியாக யார், எவ்விடம் செல்வது என்று தீருமானித்தனர். அவர்கள் பல்வேறு நகரங்களிலும் ஆசிரியப் பணியை மேற்கொண்டனர். உடன் ஊழியர் ஒருவருடன் லிஞ்ச் யாழ்ப்பாணம் சென்றார்.

**காலத்தை பயன்படுத்து**
**நாட்கள் பொல்லாதவைகள்**

# ஆக்கில்லா..
# பிரிஸ்கில்லா...

அகதிகளாக்கப்பட்டு அலைந்து திரிந்தவர்கள் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லா தம்பதியர். பொந்து தேசத்தான் என்று (கப்பதோக்கியாவுக்கும் கருங்கடலுக்கும் இடைப்பட்ட தேசம் இது இன்றைய துருக்கி). இந்த யூதன் பிளைப்பைத் தேடி ரோமாபுரிக்கு செல்ல. பின்பு ரோம அரசாங்கத்தின் கெடுபடியினால் கொரிந்து பட்டணம் (கிரேக்க நாடு) வந்து சேர்ந்தான். கூடாரம் செய்து விற்கிற தொழிலானது அவனை கூடாரவாசியாகவும் மாற்றி விட்டது. மாறி மாறி தேசத்தை மாற்ற வேண்டியவர்கள் வாழ்வில் ஏற்ப்படும் தாக்கத்தின் மத்தியில் குடும்பவாழ்கையை கவனிப்பதும் இணைந்து வாழ்வதும் அதுவும் கொரிந்து போன்ற துன்மார்க்கப்பட்டணத்தில் (1 கொரி. 5:11. அப் 18:17 ) மிகவும் கடினம். ஆனால் தேவ சித்தத்தின் நோக்கம் என்பது சற்றே வித்தியாசமாக காணப்பட்டது.

வேலையினிமித்தம் பவுலை சந்திக்க நேரிட்டு பின்னர் பவுலோடு சேர்ந்து கர்த்தரின் பணியில் ஈடுபட்ட இந்த தம்பதியர் துடிதுடிப்பானவர்கள். அப்பல்லோவை அப்போஸ்தலனாக்க உதவயது. இவர்களின் தீவிரமான இந்த தேவப்பணியே, போட்டி போட்டுக்கொண்டு தேவனுக்காக வைராக்கியம் காண்பித்த இந்த தம்பதியரின் பெயர் முன்னுக்குப்பின் வருவதற்க்கு காரணம் இதுவே. முதலில் ஆக்கில்லா பிஸ்கில்லா என்றும் பின்னர் பரிஸ்கில்லா ஆக்கில்லா என்றும் வருகிறது.

வாழ்கையில் எங்கு சென்றாலும், எத்தேசத்திலிருந்தும் எந்த சூழ்நிலையிலிருந்தும் வீட்டிலே சபையை ஸ்தாபித்து விட்டார்கள் ரோமாபுரியில் , கொரிந்துவில் , பின்னர் எபேசுவில் என அவர்கள் செயல் படுவதனைக் காணமுடியும். ஆண்டவரின் ஊழியங்களுக்காக பிராணனையும் கொடுக்க ஆயத்தமானவர்கள் இவர்கள்.

ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து கொண்டு, ஆண்டவரின் பணியிலும் தங்கள் சொந்த வேலையின் மத்தியிலும் ஆண்டவரின் பணியினை வெகு சிறப்பாக செய்து கொண்டிருந்த இந்த குடும்பம் இணைபிரியாமல் வாழ்ந்ததை அவர்கள் பெயர் ஒற்றுமை எடுத்து காட்டுகிறது. இருவருக்கும் தரப்பட்டிருந்த கிருபைகளை இணைந்து இயக்குவித்து ஆவியானவரின் கையில் அவர்களை பலத்த ஆயுதமாதமாக மாற்றி போனது மாத்திரமல்லாமல், அவர்களைக் குறித்து அனைத்து தேவவபைகளும் ஆர்ப்பரிக்கவும், நன்றி செலுத்தவும் காரணமாகி மாறிவிட்டனரே! இந்த பக்கியுள்ள தேவகுடும்பத்தினர்.

**- நெல்சன் சோபித ராஜ்.**




மனசாட்சி என்ற சொல்லிற்கு, ஒரு மனிதனின் சிந்தனைகள், செயல்கள் சரியானதா தவறானதா என்ற விழிப்புணர்வு அல்லது எச்சரிப்பை கொடுக்கும் மனதின் ஒரு பகுதி என பொருள் கொள்ளலாம். தேவன் நம்முடைய உள்ளான மனிதனில் மனசாட்சியின் மூலம் பேசுகிறார். மனிதனுடைய ஒவ்வொரு செயல்களையும் கிரியைகளையும் சிந்தைகளையும் பட்டியலிட்டு காட்டுவதுதான் மனசாட்சி.

## தேவனுக்கு பிரியமில்லாத மனசாட்சி:

நம்முடைய வாழ்வில் அனேக வேளைகளில் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்து விட்டு, அதை நியாயப்படுத்தவும் முயற்சிக்கிறோம். அல்லது அவைகளை மறந்து போனவர்களாக காணப்படுகிறோம். வேதத்தில் பல்வேறு பகுதிகளில் நாம் அதை பார்க்கலாம்.

அப்போஸ்தலன் பவுல் ரோமர் 1:21ல் சொல்லுகிறார் “அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்த்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தைக ளினாலே வீணரானார்கள், உணர்வில்லாதஇருதயம் இருளடைந்தது.” என்று. இது தேவனை அறிந்தும் அவருக்கு பிரியமில்லாத வகையிலே நம் வாழ்வு காணப்படுவது. இதனை உலகப் பிரகாரமான வாழ்வில் நம்மை இணைத்து கொள்ளும் ஒரு பெலவீனமான வாழ்வு (பெலவீன மனசாட்சியோடு கூடிய வாழ்வு) என புரிந்து கொள்ளலாம். அனேக வேளைகளில் ஒன்றும் அறியாதவர் போல நிர்விசாரமான வாழ்வு கூட வாழ்கிறோம்.

மோவாபின் ராஜாவாகிய பாலாக் இஸ்ரவேலை சபிக்க பிலேயாம் தீர்க்கத்தரிசியை அழைத்த போது தேவன் "நீ அவர்களோடே போக வேண்டாம்" என்று சொன்னார். தேவன் வாக்கு மாறாதவர் என பிலேயாம் தீர்க்கத்தரிசி அறிந்திருந்தும் ராஜா அனுப்பின மனுஷரை ஏற்றுக்கொண்டான். இஸ்ரவேலை சபிக்க புறப்பட்ட போது மூன்று முறை தேவ தூதன் வழியில் தடுத்தும் மூன்று முறையும் அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. (எண்ணாகமம்:22) இப்படிப்பட்டதான தேவ சித்தத்திற்கு மாறான செயல்பாடுகள் நம்மில் உண்டா?

## தேவனுக்கு ஏற்ற மனசாட்சி:

வேதம் கூறுகிறது "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம், ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனசாட்சியைச் செத்தக் கிரியைகளற சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்."(எபி 9:14) மேலும் விசுவாசத்தின் இரகசியத்ததை சுத்த மனசாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவாகளாயும் இருக்க வேண்டும் என 1 தீமோ 3:9 ல் வாசிக்கிறோம். தாவீது தான் பாவம் செய்த போது தேவனே சுத்த இருதயத்தை எனக்குத் தாரும் என்று விண்ணப்பம் பண்ணினார். 1பேதுரு 3:21 ல் ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலரயிராமல், தேவனைப் பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து என்று வாசிக்கின்றோம்.

ஒரு மனிதனின் சிந்தைகள் செயல்கள் பாடுகள் சரியானதா தவறானதா என்ற விழிப்புணர்வு அல்லது எச்சரிப்பை கொடுக்கும் உள்ளத்தின் ஒரு பகுதிதான் மனசாட்சி. தேவன் நம்முடைய உள்ளான மனிதனில் மனசாட்சியின் மூலம் பேசுகிறார். நம்முடைய சிந்தைகளையும் செயல்பாடுகளையும் நாம் மேலோட்டமாக மறந்தாலும் மறக்காது பட்டியலிட்டு காட்டுவது நமது மனசாட்சிதான்.

ஆம் அருமையானவர்களே ! நம்முடைய மனசாட்சி நம்மை குற்றமற்றவன் என்று தீர்க்குமா? நம்மால் பவுலைப் போல எல்லா விஷயத்திலேயும் நல்மனசாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்று சாட்சி கூற முடியுமா? சற்று ஆராய்ந்து பார்ப்போம். ஏந்த சூழ்நிலையும் கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிக்காதபடி அவருடைய உயிர்த்தெழுலின் சாயலில் இணைக்கப்பட்டவர்களாகிய நாம் சத்திகரிக்கப்பட்ட சுத்த மனசாட்சியோடே தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாக நல்ல மனசாட்சியோடே குற்றமற்றவர்களாய் வாழ பிரயாசப்படுவோம்.

தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் அப்பேர்பட்ட வாயப்பினைத் தருவாராக.

M. Nesamony

# Did you KNOW? FACTS



## Bible Facts

**NUMBER OF BOOKS IN THE BIBLE**

# 66

**39**
Number of books in the Old Testament

**27**
Number of books in the New Testament

**NUMBER OF AUTHORS**
**40**

*Years to write*
**1,500**

**1,189**
NUMBER OF CHAPTERS IN THE BIBLE

Number of chapters in the Old Testament
**929**

Number of chapters in the New Testament
**260**

**31,173**
NUMBER OF VERSES IN THE BIBLE

Number of verses in the Old Testament
**23,214**

Number of verses in the New Testament
**7,959**

Number of questions in the Bible
**3,294**

Number of prophecies in the Bible
**more than 8,000**

Number of commands in the Bible
**6,468**

Number of promises in the Bible
**1,260**

**Psalm 119**
LONGEST CHAPTER IN THE BIBLE

**Psalm 117**
SHORTEST CHAPTER IN THE BIBLE

**Job 3:2**
SHORTEST VERSE IN THE BIBLE

**Joshua 8:33**
LONGEST VERSE IN THE BIBLE

LANGUAGES OF THE BIBLE = 3: GREEK, HEBREW, ARAMAIC




இந்த அருமையான துதிப் பாடலை எழுதிய **அருள் திரு. வேதமாணிக்கம்,** 1864-ம் ஆண்டு கல்லுக் கூட்டத்தில், மதுரநாயகம். – தேவாயி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். ஐந்து வயதிலேயே தந்தையை இழந்த வேதமாணிக்கத்தை அவரது தாயார் தெய்வ பக்தியில் வளர்த்தார். தனது 20-வது வயதில், வேதமாணிக்கம் மத்திகோடு சபையைச் சார்ந்த இராகேலை மணம்புரிந்தார்.

வேதமாணிக்கம் தனது உயர் படிப்பை முடித்து அரசு அதிகாரியாக வேலையிலமர்ந்தார். பக்தி, விசுவாசம், மற்றும் சிறப்பாக, ஜெபம் ஆகியவற்றில் அதிக வாஞ்சையுள்ளவராக விளங்கினார். உலகப் பொருளுக்கோ, பணத்திற்கோ மனதில் இடம் கொடாது, மண்தரை போட்ட, ஓலை வேய்ந்த குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் ஆங்கிலேயரான அவரது மேலதிகாரி, அவரை நோக்கி, “வேத மாணிக்கம், நீ வேதம் ஓத வேண்டியவன்@ இங்கு எப்படி வேலை செய்யலாம்?” என்று கேட்டார். இக்கேள்வி வேதமாணிக்கத்தின் உள்ளத்தில் பதிந்தது.

ஆழ்ந்து சிந்தித்த வேதமாணிக்கம், நற்செய்திப் பணியில் கொண்ட ஆர்வத்தால், உடனே அரசு வேலையை இராஜிநாமா செய்து விட்டு, மிஷனில் ஆசிரியராகவும், பின்னர் மிஷன் பள்ளிகளின் ஆய்வாளராகவும் பணியாற்றினார். சிறிது காலம் மத்திகோடு சபை உபதேசியராக ஊழியம் செய்தபின், 1912-ம் ஆண்டு கல்லுக்கூட்டம் திருச்சபைப் போதகரானார். பல பாடல்களை இயற்றி, இன்னிசையுடன் நற்செய்தி அளித்து வந்தார்.

தன்னை ஒறுத்து ஊழியம் செய்த போதகர் வேதமாணிக்கத்தின் ஆலய ஆராதனையில், மக்கள் திரள் கூட்டமாகப் பங்கேற்றனர். அவர் வாலிபர்களை நல்வழிப் படுத்த “சுவிசேஷப் படையெழுச்சி,” என்ற திறந்த வெளிக் கூட்டங்களை நடத்தினார். இந்நிகழ்ச்சிகளில் பாட, “சுவிசேஷப் படையெழுச்சிக் கீதங்கள்,” என்ற 16 பாடல்கள் அடங்கிய பாடல் புத்தகத்தை வெளியிட்டார். ஞாயிறு தோறும் மாலை நேரத்தில், பெண்களுக்குச் சிறப்பு வேதப் பயிற்சிக் கூட்டங்களை, வீடுகளில் நடத்தினார். கண்ணியமும், நேர்மையும் நிறைந்த போதகர் வேதமாணிக்கம், ஊர்ப் பிரச்சனைகளைத் தீர்க்கும் ஊர்க்கூட்ட நடுவராகவும் சமுதாயப் பணி செய்தார்.

ஆண்டவரின் ஊழியப் பாதையில் தன்னுடையது அனைத்தையும் அர்ப்பணம் செய்த வேதமாணிக்கத்தின் குடும்பத்தை ஆண்டவர் ஆசீர்வதித்தார். அவரது மூன்று பையன்களுக்கும், மூன்று பெண்பிள்ளைகளுக்கும், தேவன் நல்ல படிப்பு, வேலை, மற்றும் இசை ஞானத்தைத் தந்தார். வயலின் தான் அவர்களின் குடும்ப வாத்தியம். அதில் அவர்கள் அனைவரும் மேதைகளாக விளங்கினார்கள். எனவே, குடும்பமாகப் பல இடங்களுக்குச் சென்று, நற்செய்திக் கூட்டங்களையும், கதாகாலட்சேபங்களையும் நடத்தி வந்தனர். வெள்ளி, மற்றும் ஞாயிறு இரவு ஜெபக் கூட்டங்கள் வாத்தியக்கருவிகளுடன் பாட்டுகள் முழங்க நடைபெற்றன.


1917-ம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதி, அருள்திரு. வேதமாணிக்கம் மார்த்தாண்டத்திலுள்ள தனது மனைவியின் தங்கை வீட்டிற்குச் செல்ல பஸ்ஸில் ஏறும்போது தவறி விழுந்ததில், பேருந்தின் சக்கரம் அவரது காலில் ஏறிக் காயம் ஏற்பட்டது. அத்துடன் பயணத்தைத் தொடர்ந்த அவர், மார்த்தாண்டத்தில், மூன்றாம் நாளில், 10-5-1917 அன்று, தனது 53-வது வயதில் மரணமடைந்தார். அவர் இயற்றிய, “ஆ! இன்ப காலமல்லோ,” “ஜீவ வசனம் கூறுவோம்,” என்ற பாடல்களும், திருச்சபைக் கீர்த்தனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.




**இம்மட்டும் வழிநடத்தி வந்த எபினேசர்; இனிமேலும் நம்மை பாதுகாப்பார், வழி நடத்துவார். கர்த்தருடைய கிருபை நம் ஒவ்வொருவரோடும் எப்போதும் தங்கியிருக்க நாம் இன்னும் ஊக்கமாய் ஜெபிப்போம்.**

# CHILDREN'S CORNER

**THE SAME BOAT** A Joyful 'toon by Mike Waters




You, therefore, have no excuse, you who pass judgment on someone else, for at whatever point you judge another, you are condemning yourself, because you who pass judgment do the same things. – Romans 2:1 NIV



# COLORING PAGE

(Kin/Beg)



# MOSSES


Dear Kids...


*Please colour and Sent to Church Email before 20th July 2020*


*Write your name here...*

# Three in the Fire Spot the Differences

Compare the picture on the top with the picture on bottom. Circle the 16 things that are different.









Please follow

Beginner


# KID'S CORNER

## BIBLE BUZZ

Check out **Acts 9:1-20** and complete the story of Saul:




**1** Before knowing Jesus, Saul used to hurt Christians. He even got a letter from the ____________________ that would let him arrest any Christians he found.



**2** As soon as he got the letter, Saul set off on his mission. But as he neared ________________, a bright light shone around and blinded him. Then, he heard the voice of ____________! Jesus spoke to Saul and it completely changed him.



**3** Then, God told ____________ to visit Saul and help restore his vision. So Ananias went to Saul's house. As he spoke to Saul, something like scales fell off Saul's eyes and he could see again. Then, Saul got ______________.
(APBSDETI)



**4** Soon, Saul began preaching about ________________. He stopped hurting Christians and instead, started helping them. After meeting Jesus, he was completely new person!

Knowing Jesus changes our lives, too. Look up **2 Corinthians 5:17-21** to know more!

## BIBLE VERSE

Use **2 Corinthians 5:17(NIV)** to unscramble these words:

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________

new the has here is new if gone in creation anyone has old Christ the is come Therefore the

# FILL-IN-THE-VERSE

## FAMOUS VERSES OF JESUS

Beginner / Primary

1. "Jesus said to her, 'I am the __ __ __ __ __ __ __ __ __ __ __ __ and the life. The one who believes in me will __ __ __ __, even though they die." *John 11:25*

2. "Therefore do not worry about __ __ __ __ __ __ __ __, for __ __ __ __ __ __ __ __ will worry about itself. Each day has enough trouble of its own." *Matthew 6:34*

3. "Jesus answered, 'I am the __ __ __, and the __ __ __ __ __, and the __ __ __ __. No one comes to the Father except through me.'" *John 14:6*

4. "By this everyone will know that you are my __ __ __ __ __ __ __ __ __, if you love one __ __ __ __ __ __ __." *John 13:35*

5. "For God so loved the world that he gave his one and only Son, that whoever believes in __ __ __ shall not perish but have __ __ __ __ __ __ __ life." *John 3:16*

# Color & Hunt Challenge

ADAM & EVE



## In The Garden

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | S | E | N | P | G | I | U | B | X | P | H | J | R | H | A | V | C |
| V | D | V | F | E | Y | B | J | D | O | U | F | A | B | Q | E | R | Y |
| S | J | U | V | O | D | H | G | D | G | J | L | K | F | K | E | O | O |
| W | R | E | J | D | E | R | J | D | N | O | J | T | K | A | I | I | E |
| R | O | M | I | K | E | G | A | Q | N | S | G | C | T | C | O | U | A |
| A | D | A | M | J | A | D | D | J | W | G | D | E | Z | X | H | Z | R |
| I | N | J | U | P | K | V | N | E | J | S | D | H | A | E | M | H | T |
| S | L | A | U | B | X | C | E | A | L | K | G | R | O | U | N | D | H |
| X | S | F | M | W | O | M | A | N | M | W | H | L | X | R | L | Z | O |
| Y | X | E | U | N | E | D | R | A | G | M | O | S | B | C | F | G | Q |
| R | N | Y | A | X | A | D | D | R | U | M | O | N | U | F | V | X | W |
| S | W | A | R | R | Z | G | H | Y | E | S | M | C | K | R | L | C | I |
| O | J | H | M | L | T | Z | Y | E | T | V | G | I | N | S | D | Y | S |
| Y | O | N | L | Z | J | H | V | R | A | K | I | L | P | G | F | I | G |
| Q | K | B | V | D | G | Z | E | Z | Q | V | H | R | O | Y | W | O | Z |
| H | H | O | A | W | L | A | O | Z | C | I | E | D | U | E | L | P | C |
| F | P | F | N | U | M | N | O | P | C | G | T | N | V | D | L | D | R |
| S | I | W | B | S | V | Z | F | X | Y | A | S | O | S | B | M | W | E |

Adam & Eve

BEGINNER & PRIMARY

ADAM
EARTH
GARDEN
GROUND
MAN
WOMAN

COMMANDED
EARTH
GOD
HEAVENS
RIVER

CREATED
EVE
GOLD
KNOWLEDGE
STREAMS

# GALATIANS

## THE GOSPEL OF GRACE



1. In which country would modern day Galatia be now ?

2. What is the missing word ? "So, I died to the _____ so that I might live for God"

3. What words did Saul hear when he was struck on the way to Damascus ?

4. Who wrote the book of Galatians ?

5. How many chapters are there in the book of Galatians ?

6. Can you name 3 of the 9 fruits of the Spirit named in Chap'5 ?

7. Which 2 men did Paul take to Jerusalem ?

8. To whom did Paul say he was called to preach the Good News: Jews or Gentiles ?

9. What was Paul's religion before he believed in Jesus ?

10. Approximately when was Galatians written: 55AD or 100AD ?

PRIMARY & ABOVE


Congratulations
WOW!
You did it!
Crasslin Devona / Hartlyn Herchil
Reagan Shan / Jania Preni / Johan Sanjo
Eion Jayden, Eric Jayden,
Chris Gabriel / Jeremiah / Jemima
Jonathan / Roshan / Eric Aaron
Shelbino / Jason Eric / Joshua
Angelin
Manna
May
2020
Results

# வேத வினா-விடை போட்டி
## (ஆகாய் , சகரியா 1 – 8)

1. குத்துவிளக்குக்கு வலது புறமாகவும், இடது புறமாகவும் இருக்கிற இரண்டு ஒலிவ மரங்கள் என்ன என்று கேட்ட சகரியாவுக்கு கர்த்தர் உரைத்த பதில் என்ன?

2. நான் கூப்பிட்டபோது அவர்கள் எப்படி கேளாமற்போனார்களோ அப்படியே நானும் கேளாமலிருந்தேன் என்று எதனால் கர்த்தர் சொல்கிறார்?

3. யாரை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார்?

4. பூமியின்மீதெங்கும் புறப்பட்டு போகிற சாபம் எது?

5. எத்தனை வருடங்கள் எருசலேமின் மேலும் யூதாவின் மேலும் கர்த்தர் கோபம் கொண்டிருந்தார் என்று தூதன்சொல்கிறார் ?

6. தரியு ராஜா அரசாண்ட போது யூதாவின் பிரதான ஆசாரியனாக இருந்தது யார்?

7. கர்த்தர் வெறுக்கிற காரியங்கள் எவை?

8. அழுக்கு வஸ்திரம் தரித்திருந்த யோசுவாவுக்கு கர்த்தர் செய்தது என்ன?

9. கர்த்தர் யாருக்காக கடும் வைராக்கியம் கொண்டிருந்தார்?

10. தரியு ராஜா அரசாண்டு இரண்டாம் வருஷம் சேபாத் மாதம் கர்த்தருடைய வார்த்தை யாருக்கு உண்டானது?

### May'2020
விடை எழுதியவர்கள்

திரு.ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்
திரு. M.C கிறிஸ்டோபர்
திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்
திருமதி. ஜமுனா ராணி
திருமதி. ராதிகா செல்வகுமார்
திருமதி. எபென் A. பிரசாத்
திருமதி. ஜெயந்தா ஜாண்
திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
திருமதி. பிப்லின் நெல்சன்
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஷாலினி கிங்சிலி
திருமதி. பெட்ரிஷியா ஜேசன்
திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்
திருமதி. பமீலா டேனியல்
திருமதி. ஷெரின் டியென்ஷன்
செல்வி. ஜெரின் மகதலேன்
திருமதி. சிந்துஜா சதீஷ்
திருமதி. அல்சிட்டா கிங்சிலி



### சென்ற மாத விடைகள்

| | |
|---|---|
| 1. ஆபகூக் 3:4 | 2. செப் 2:3 |
| 3. ஆபகூக் 1:14 | 4. நாகூம் 3:9 |
| 5. செப் 1:6 | 6. நாகூம் 2:13 |
| 7. செப் 1:1 | 8. ஆபகூக் 1:3 |
| 9. நாகூம் 1:3 | 10.ஆபகூக் 2:20 |

# HAPPY BIRTHDAY

JUNE CELEBRANTS

| | |
|---|---|
| MRS. BABY CHRISTY MONALIZHA | 2-JUN |
| MRS. ESTHER GERALD ANTONY | 4-JUN |
| MRS. SHALINI RAJESH | 5-JUN |
| MR. JOEL RANJITH KUMAR | 6-JUN |
| MR. JAFFRIN JERALD | 6-JUN |
| MR UJIN RAJ | 8-JUN |
| MS. ANSILIN SUGA | 9-JUN |
| MR. SAMAN RAJ KUMAR | 10-JUN |
| MR. CHANDRASEKAR.P | 10-JUN |
| MR. ASHOK DANIEL PRABAKARAN | 16-JUN |
| MRS. ANITHA JOSE | 17-JUN |
| MR. MELBIN PAUL | 22-JUN |
| MR. BELFER JOHN SIGAMONY | 23-JUN |
| MR. DAVID JOHNSON PREMKUMAR | 23-JUN |
| MR. ASHOK PRASAD | 24-JUN |
| MR. BIDDU MOHAN | 26-JUN |
| MRS. SHINY REBECA PRABHU | 27-JUN |
| MR. NESAMONY.M | 30-JUN |
| MRS. SINDUJA SATHISH KUMAR | 30-JUN |

என்னாலே உன் நாட்கள் பெருகும்;
உன் ஆயுசின் வருஷங்கள்
விருத்தியாகும்.
நீதிமொழிகள் 9:11




# JUNE
## CELEBRANTS

**1** MR. JEREMIAH KINGSTON &
MRS. OLIVIA SHERIN

**2** MR. ASHOK DANIEL &
MRS. PRINCY ASHOK

**6** MR. ASHOK PRASAD &
MRS. EBEN A PRASAD

**15** MR. S. DEVA PRAKASH &
MRS. SHEEBA

**21** MR. BALAJI RAMAIYAN &
MRS. ROSELIN TAMIL SELVI

**29** MR. CELIN JOSE &
MRS. ANITHA



# சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

**CSI Tamil Parish Family No: 109** — **Mobile No: 055 586 9852**

Mr. Pushpa Raj (Head)

Mrs. Biji Kumari (Wife)

Mr. Lifin Raj (Son)
Mr. Aspin Raj & Mr. Libin Raj

Location in India:
Marthandam, Kanyakumari Dist
Tamil Nadu



**CSI Tamil Parish Family No: 109A** — **Mobile No: 050 664 3861**

Mr. Vijin Raj (Head)

Mrs. Pamela Jennifer (Wife)

Baby. Zia Miren (Daughter)

Location in India:
Marthandam
Kanyakumari Dist
Tamil Nadu



**CSI Tamil Parish Family No: 110** — **Mobile No: 055 701 1315**

Mr. Antony Helvin Gerald (Head)

Mrs. Esther Gerald Antony (Wife)

Mr. Antony Lerinson (Son)

Location in India:
Rameswaram,
Ramnad Dist,
Tamil Nadu



**CSI Tamil Parish Family No: 111** — **Mobile No: 052 583 1495**

Mr. Babu Abraham (Head)

Mrs. Babitha (Wife)

Baby. Aaliya B. Babina (Daughter)
Mstr. Aishlin Babu

Location in India:
Kamaraj Street, Vattakottai
Vaariyoor (PO), Kanayakumari Dt
Tamilnadu




# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - ஜூன் 2020

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | உபாகமம் 5 | சங்கீதம் 88 | ஏசாயா 33 | வெளிப்ப. 3 |
| 2 | உபாகமம் 6 | சங்கீதம் 89 | ஏசாயா 34 | வெளிப்ப. 4 |
| 3 | உபாகமம் 7 | சங்கீதம் 90 | ஏசாயா 35 | வெளிப்ப. 5 |
| 4 | உபாகமம் 8 | சங்கீதம் 91 | ஏசாயா 36 | வெளிப்ப. 6 |
| 5 | உபாகமம் 9 | சங்கீதம் 92,93 | ஏசாயா 37 | வெளிப்ப. 7 |
| 6 | உபாகமம் 10 | சங்கீதம் 94 | ஏசாயா 38 | வெளிப்ப. 8 |
| 7 | உபாகமம் 11 | சங்கீதம் 95,96 | ஏசாயா 39 | வெளிப்ப. 9 |
| 8 | உபாகமம் 12 | சங்கீதம் 97,98 | ஏசாயா 40 | வெளிப்ப. 10 |
| 9 | உபாகமம் 13,14 | சங்கீதம் 99-101 | ஏசாயா 41 | வெளிப்ப. 11 |
| 10 | உபாகமம் 15 | சங்கீதம் 102 | ஏசாயா 42 | வெளிப்ப. 12 |
| 11 | உபாகமம் 16 | சங்கீதம் 103 | ஏசாயா 43 | வெளிப்ப. 13 |
| 12 | உபாகமம் 17 | சங்கீதம் 104 | ஏசாயா 44 | வெளிப்ப. 14 |
| 13 | உபாகமம் 18 | சங்கீதம் 105 | ஏசாயா 45 | வெளிப்ப. 15 |
| 14 | உபாகமம் 19 | சங்கீதம் 106 | ஏசாயா 46 | வெளிப்ப. 16 |
| 15 | உபாகமம் 20 | சங்கீதம் 107 | ஏசாயா 47 | வெளிப்ப. 17 |
| 16 | உபாகமம் 21 | சங்கீதம் 108,109 | ஏசாயா 48 | வெளிப்ப. 18 |
| 17 | உபாகமம் 22 | சங்கீதம் 110,111 | ஏசாயா 49 | வெளிப்ப. 19 |
| 18 | உபாகமம் 23 | சங்கீதம் 112,113 | ஏசாயா 50 | வெளிப்ப. 20 |
| 19 | உபாகமம் 24 | சங். 114,115 | ஏசாயா 51 | வெளிப்ப. 21 |
| 20 | உபாகமம் 25 | சங். 116 | ஏசாயா 52 | வெளிப்ப. 22 |
| 21 | உபாகமம் 26 | சங். 117,118 | ஏசாயா 53 | மத்தேயு 1 |
| 22 | உபா. 27,28:1-19 | சங். 119:1-24 | ஏசாயா 54 | மத்தேயு 2 |
| 23 | உபா. 28:20-68 | சங். 119:25-48 | ஏசாயா 55 | மத்தேயு 3 |
| 24 | உபாகமம் 29 | சங். 119:49-72 | ஏசாயா 56 | மத்தேயு 4 |
| 25 | உபாகமம் 30 | சங். 119:73-96 | ஏசாயா 57 | மத்தேயு 5 |
| 26 | உபாகமம் 31 | சங். 119:97-120 | ஏசாயா 58 | மத்தேயு 6 |
| 27 | உபா. 32 | சங். 119:121-144 | ஏசாயா 59 | மத்தேயு 7 |
| 28 | உபா. 33,34 | சங். 119:145-176 | ஏசாயா 60 | மத்தேயு 8 |
| 29 | யோசுவா 1 | சங்கீதம் 120-122 | ஏசாயா 61 | மத்தேயு 9 |
| 30 | யோசுவா 2 | சங்கீதம் 123-125 | ஏசாயா 62 | மத்தேயு 10 |
| | | | | |

# REV. M. CHRISTOPHER RAJENDRAN FAREWELL MEETING VIA ZOOM LIVE/ 31-MAY




# You're a great Pastor!

Your hard work and sacrifice are appreciated!

# C.S.I TAMIL PARISH, ALAIN- UAE

## A WARM WELCOME TO OUR NEW PRIEST





# REV. S. P BASKAR

EDITOR

THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES

POST BOX. 67747 | TEL: +971 (3) 755 9630 | MOB: 056 7105 082

**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY